**கவனிக்க**.- 05.07.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1819 - 2013 ජූලි මස 12 වැනි සිකුරාදා - 2013.07.12

*1819 ஆம் இலக்கம் – 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 934 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 936 |


**கவனிக்க**.- (i) ஸ்ரீ சித்தார்த்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2013, மே மாதம் 17 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) கலாசாரம் மற்றும் பண்பாடுகளைக் கட்டியெழுப்புவதற்கான இலங்கை கலாசார மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2013, மே மாதம் 23 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(iii) மட்டக்களப்பு வாலிப கிறிஸ்தவ சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2013, மே மாதம் 23 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2013, ஓகத்து மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, யூலை மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பீ. எச். எல். வீ. டீ சில்வா**,
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அமைச்சு

நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் முறைசாரா கல்விப் போதனாசிரியர் மற்றும் சமையற்காரர் பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்

நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள முறைசாரா கல்விப் போதனாசிரியர் மற்றும் சமையற்காரர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன.

1. **பொதுவான தகைமைகள்.-** (அ) விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையான பெண்ணாக இருத்தல் வேண்டும்.

(ஆ) நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

2. **முறைசாராக் கல்விப் போதனாசிரியர் பதவி** :

(i) *கல்வித் தகைமைகள்.-* கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி மற்றும் கணிதம் உட்பட மேலும் இரு பாடங்களுக்குத் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் (06) சித்தியடைந் திருத்தல் ;

மற்றும்

கல்விப் பொதுத் தராதர (உயர் தரப்) பரீட்சையில் ஆகக்குறைந்தது ஒரு பாடத்திலேனும் (01) (பொதுவான பாடம் தவிர) சித்தியடைந்திருத்தல்.

*தொழில்சார் தகைமைகள்.-* குறித்த துறையில் பெற்றுள்ள தொழில்சார் தகைமைகள் விசேட தகைமைகளாகக் கருதப்படும்.

*அனுபவம்.-* அரச அங்கீகாரம் பெற்றுள்ளதொரு நிறுவனத் தில் முறைசாராக் கல்வி நடவடிக்கைகளில் ஆசிரியராக/ போதனாசிரியராக இரண்டு (02) வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

(ii) *வயதெல்லை.-* விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாதவராகவும், 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (தற்போது அரசாங்க சேவைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.)

(iii) *சம்பள அளவுத்திட்டம்.-* சம்பளத் தொகுதி - எம்என் - 1-2006ஏ (பொது நி. சு. இல. 06/2006 (iv) இற்கமைய)

*சம்பள அளவுத்திட்டம்.-* ரூபா 13,120 - 10 X 145 - 11 X 170 - 10 X 240 - 10 X 320 - ரூபா 22,040

(iv) *ஆட்சேர்ப்பு ஒழுங்குமுறை.-* கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையில் உச்ச புள்ளியைப் பெற்றுக்கொள்கின்றவர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள்.

கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையில் புள்ளி வழங்கப்படு கின்ற தலைப்புக்கள் :

| | | |
|---|---|---|
| (i) | மேலதிக கல்வித் தகைமைகள் | - உச்ச புள்ளிகள் 25 |
| (ii) | சிறுவர் மற்றும் இளம்பிராய பாதுகாப்பு தொடர்பான பாடநெறிகள் | - உச்ச புள்ளிகள் 10 |
| (iii) | சிறுவர் வேலைகள், சிறுவர் இல்லங்கள் மற்றும் சிறுவர் பராமரிப்பு பற்றிய பயிற்சிகள் | - உச்ச புள்ளிகள் 10 |
| (iv) | மேலதிக அனுபவம் | - உச்ச புள்ளிகள் 30 |
| (v) | கணனிப் பயிற்சி | - உச்ச புள்ளிகள் 10 |
| (vi) | ஆங்கில மொழி அறிவு | - உச்ச புள்ளிகள் 10 |
| (vii) | நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறமைகள் | - உச்ச புள்ளிகள் 05 |

3. **சமையற்காரர் பதவி** :

(i) *கல்வித் தகைமைகள்.-* கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத தடவைகளில் ஆகக்குறைந்தது இரண்டு திறமைச் சித்தி களுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

*தொழில்சார் தகைமைகள்.-* தேசிய பயிலுனர் சபையின்கீழ் அல்லது தொழில் பயிற்சி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட் டுள்ள ஒரு நிறுவகத்திடமிருந்து உணவு சமைத்தல் தொடர் பான தேசிய தொழில் தகைமைகளின் (NVQ) இரண்டாம் அல்லது மூன்றாம் மட்டத்திற்கு குறையாத பாடநெறி யொன்றை கற்றிருத்தல் வேண்டும்.

*அனுபவம்.-* பதவி தொடர்பான அனுபவத்தைப் பெற்றிருத் தல் விசேட தகைமையாகக் கருதப்படும்.

(ii) *வயதெல்லை.-* விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (தற்போது அரசாங்க சேவைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.)

(iii) *சம்பள அளவுத்திட்டம்.-* சம்பளத் தொகுதி - பீஎல் - 2 - 2006 ஏ (பொது நி. சு. இல. 06/2006 (iv) இற்கமைய)
*சம்பள அளவுத்திட்டம்.-* ரூபா 12,210 - 10 X 130 - 10 X 145 - 10 X 160 - 12 X 170 - ரூபா 18,600.

(iv) *ஆட்சேர்ப்பு ஒழுங்குமுறை.-* தொழில்சார் பரீட்சை மற்றும் கட்டமைப்புசார் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் கூட்டுத்தொகையின் திறமை ஒழுங்குமுறையின் அடிப்படை யில் உச்ச தகைமைகளைப் பெற்றுக்கொள்கின்றவர்கள் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள்.

*விதிவிலக்கு.-* (அ) அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள பரீட்சார்த்திகளிலிருந்து தொழில்சார் பரீட்சையில் சித்தியடைகின்ற விண்ணப்பதாரர்களின் திறமை ஒழுங்கு முறைக்கு அமைய, ஆட்சேர்ப்புச் செய்ய உத்தேசித் துள்ள எண்ணிக்கையைப் போன்று ஐந்து மடங்கு எண்ணிக்கை யானோர் கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் படுவார்கள்.

*தொழில்சார் பரீட்சையில் புள்ளி வழங்கப்படுகின்ற தலைப்புகள் :*

| | | |
|---|---|---|
| (1) | துறைசார் அடிப்படை அறிவு | - உச்ச புள்ளிகள் 20 |
| (2) | சமையலறை உபகரணங்கள் பற்றிய அறிவு | - உச்ச புள்ளிகள் 20 |
| (3) | சமையலறை உபகரணங் களின் தவறுகளை இணங் காண்பதற்குள்ள ஆற்றல் | - உச்ச புள்ளிகள் 40 |
| (4) | உபகரணங்களைப் பயன் படுத்தல் | - உச்ச புள்ளிகள் 20 |

கட்டமைப்புசார் பரீட்சையில் புள்ளி வழங்கப்படுகின்ற தலைப்புகள் :

| | | |
|---|---|---|
| (1) | மேலதிக கல்வித் தகைமைகள் | - உச்ச புள்ளிகள் 20 |
| (2) | மேலதிக தொழில்சார் தகைமைகள் | - உச்ச புள்ளிகள் 35 |
| (3) | அனுபவம் | - உச்ச புள்ளிகள் 30 |
| (4) | மொழித் தேர்ச்சி | - உச்ச புள்ளிகள் 10 |
| (5) | நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறமை | - உச்ச புள்ளிகள் 05 |

4. **சேவை நிபந்தனைகள்**.- (அ) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது. தெரிவுசெய்யப்படுகின்ற விண்ணப்பதாரர்கள் விதவை, தபுதாரர் அநாதை ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புத் தொகைகளைச் செலுத்த வேண்டும்.

(ஆ) தெரிவுசெய்யப்படுகின்ற விண்ணப்பதாரர்கள் தொடர்பில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் ஏற்பாடுகள் மற்றும் அ. சே. ஆ. குழுவின் 1589/30 ஆம் இலக்க 2009.02.20 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப் பட்டுள்ள நடைமுறை ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பொது நிபந்தனைகள் ஏற்புடையதாகும். மேலும் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள், நிதி ஒழுங்குவிதிகள், திணைக்களக் கட்டளைகள் மற்றும் அரசாங்கத்தினால் தற்போது வெளியிடப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் வெளியிடப்படவுள்ள கட்டளைகளுக்கும் உட்படுதல் வேண்டும்.

(இ) தெரிவுசெய்யப்படுகின்ற விண்ணப்பதாரர்கள் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் கடமைகளை மேற்கொள்வதற்கு உகந்த உடல் மற்றும் உள ரீதியான ஆரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும் என்பதுடன், அதற்காக நடாத்தப்படுகின்ற அரசாங்க மருத்துவ பரிசோதனையில் சித்தியடைதல் வேண்டும்.

(ஈ) நியமனத் திகதி முதல் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுகின்றார்கள்.

(உ) பதவிக்கு நியமனம் பெற்று மூன்று வருட காலப்பகுதிக்குள் வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(ஊ) அரச கரும மொழி அல்லாத மொழி ஊடகங்களின் மூலம் சேவையில் இணைந்துகொள்ளும் அலுவலர்கள் தகுதிகாண் காலப் பகுதிக்குள் அரச கரும மொழிக்கான தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். மேலும் இப்பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற அலுவலர்கள் பொ. நி. சு. இல. 07/2007 இற்கமைய சேவையில் இணைந்து 5 வருட காலப்பகுதிக்குள் உரிய மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். உரிய காலப்பகுதிக்குள் மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளாத அலுவலர்களின் சம்பள ஏற்றம் நிறுத்தி வைக்கப்படும்.

5. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) இந்த அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய ஏ4 அளவான தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தித் தயார் செய்துகொள்ளும் விண்ணப்பப்படிவங்களை 2013.07.26 ஆந் திகதிக்கு முன்னர் "ஆணையாளர், நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம், இலக்கம் 69, எஸ். டி. எஸ். ஜயசிங்க மாவத்தை, கொஹுவலை, நுகேகொடை" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். உரிய கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளை உறுதிசெய்வதற்காக தாமே சான்றுப்படுத்திய சான்றிதழ்களின் பிரதிகளையும் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ) தற்போது அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது விண்ணப்பப்படிவங்களை தமது திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்ப வேண்டும். விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "முறைசாரா கல்விப் போதனா சிரியர்/சமையற்காரர் பதவிக்கான விண்ணப்பப்படிவம் - 2013" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(இ) சகல வகையிலும் பூர்த்திசெய்யப்படாதுள்ள அடிப்படைத் தகைமைகள் இல்லாத, கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளை உறுதிசெய்வதற்கான சான்றிதழ்களின் பிரதிகள் சமர்ப்பிக்கப்படா துள்ள மற்றும் உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கின்ற விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படுமென்பதுடன், விண்ணப்பப்படிவங்கள் கிடைத்தமை அல்லது நிராகரிக்கப்பட்டமை தொடர்பாக அறிவிக்கப்பட மாட்டாது.

6. **பொய்யான மற்றும் தவறான தகவல்களைச் சமர்ப்பித்தல்**.- யாராயினுமொரு அபேட்சகருக்கு தகைமை இல்லை என்பது நியமனம் பெறுவதற்கு முன்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலேனும் தெரியவரின் பரீட்சார்த்தி வாய்ப்பை அவர் இழக்கின்றார். நியமனம் பெற்ற பின்னர் அது பற்றி அல்லது வேண்டுமென்றே பொய்த் தகவல்களைச் சமர்ப்பித் திருப்பதாக அல்லது உண்மையான தகவல்கள் மறைக்கப்பட்டிருப்பதாக தெரியவருமாயின் பதவி நீக்கம் செய்யப்படுவார்.

7. விண்ணப்பம் கோரும் அறிவித்தல் தொடர்பான விடயங்கள் அல்லது இந்த அறிவித்தலின் மூலம் வெளிப்படுத்தப்படாதுள்ள வேறு விடயங்கள் தொடர்பில் எழும் பிரச்சினைகள் தொடர்பாக நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் ஆணையாளரின் தீர்ப்பு இறுதியான தாகும். முழு வெற்றிடங்களையும் நிரப்புகின்ற அல்லது நிரப்பாதிருப் பதற்கான உரிமை நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் ஆணையாளருக்கே உண்டு.

எம். யமுனா பெரேரா,
ஆணையாளர்.

நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம்,
இல. 69, எஸ். டி. எஸ். ஜயசிங்க மாவத்தை,
கொஹுவலை,
நுகேகொடை,
2013.06.26.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம்**
............................................. பதவி

1. (அ) விண்ணப்பதாரரின் முதலெழுத்துக்களுடனான பெயர் (சிங்களம்/தமிழில்) :----.
   (ஆ) விண்ணப்பதாரரின் முதலெழுத்துக்களுடனான பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :----.

2. (அ) விண்ணப்பதாரரின் முழுப்பெயர் (சிங்களம்/தமிழில்) : ----.
   (ஆ) விண்ணப்பதாரரின் முழுப்பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :----.

3. நிரந்தர முகவரி :----.

4. தற்போது வசிக்கும் முகவரி :----.

5. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

6. பால் :----.

7. பிறந்த திகதி :-

ஆண்டு :----. மாதம் :----. திகதி :----.

8. இனம் :----.

9. திருமணமானவரா ?/திருமணமாகாதவரா என்பது :----.

10. கல்வித் தகைமைகள் :-

க. பொ. த. (சா. த.) பரீட்சை :- ஆண்டு :----.

| பாடங்கள் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

க. பொ. த. (உ. த.) பரீட்சை :- ஆண்டு :----.

| பாடங்கள் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |

11. வேறு தகைமைகள் :

(i) மேலதிக தகைமைகள் :----.
(ii) தொழில்சார் தகைமைகள் :----.
(iii) அனுபவம் :----.
(iv) கணனிப் பயிற்சி :----.
(v) ஆங்கில மொழித் தேர்ச்சி :----.

**விண்ணப்பதாரரின் உறுதியுரை**

.............................................. ஆகிய நான் இங்கு குறிப்பிட்டுள்ள சகல விடயங்களும் உண்மையானவை என்றும், சரியானவை என்றும் தெரிவிக்கின்றேன். நான் அரசாங்க சேவையிலிருந்து சேவை நீக்கம் செய்யப்படவோ அல்லது கருணை அடிப்படையில் மாற்றீடாக வினைத்திறனின்மை காரணமாக சேவையிலிருந்து ஓய்வுறுத்தப்படவோ இல்லை என்றும், பதவி நீங்கிய ஒருவராக கருதப்படவில்லை என்றும் உறுதி செய்கின்றேன். இதில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் எதுவும் உண்மைக்கு மாறானவையென அல்லது தவறானவையென நான் தெரிவுசெய்யப்பட முன்னர் தெரியவரும் பட்சத்தில் தகுதியற்றவராக்கப் படுவதற்கு உட்படுவேன் என்பதையும், தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அவ்வாறான நிலைமை தெரியவரும் பட்சத்தில் எந்தவொரு நட்டஈடும் செலுத்தப்படாது தொழிலில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கான திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

திரு./திருமதி/செல்வி ................................................................ தற்போது இந்த அமைச்சில்/திணைக்களத்தில் .............................. ......................... ஆக நிரந்தர/ தற்காலிக/ அமய அடிப்படையில் சேவையாற்றி வருவதாகவும், மேற்படி பதவிக்கு அவர் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாதென்றும் அறியத்தருகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
திகதி :----.

7-342

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## சுகாதார அமைச்சு

மருத்துவ தேவைக்காக நிறைவுகாண் சேவைக்கு முன் ஆரம்ப பயிற்சி பாடத்திற்காக சமனான சுகாதாரப் பட்டதாரிகளை இணைத்துக்கொள்ளல் - 2013

சுகாதார அமைச்சின் மருத்துவ தேவைக்காக நிறைவுகாண் சேவையில் கீழ்வரும் பாடநெறிகளுக்காக சமனான சுகாதாரப் பட்டதாரிகளை இணைத்துக்கொள்ள தகுதியுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. ஒவ்வொரு பயிற்சிப் பாடத்திற்கமைய கீழ்க்குறிப்பிடப்படும் பட்டத்தை பூர்த்திசெய்த வருட (பட்டம் செல்லுபடியாகும் திகதி) அடிப்படைக்கேற்ப தயாரிக்கப்படும் ஒவ்வொரு பயிற்சி நெறிக்கு பொருத்தமானவர்கள் தெரிவுசெய்யப்படுவர். இணைத்துக்கொள்ளப் படும் திகதிக்கமைய ஒவ்வொரு பதவியிலுமுள்ள வெற்றிடங்களுக்கேற்ப இணைத்துக்கொள்ள முடியுமான பட்டதாரிகளின் தொகை எவ்வளவு என்பது தீர்மானிக்கப்படும்.

**2. பதவிக்கான கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :**

| குறியீட்டு இல. | முன் ஆரம்ப பயிற்சி பாடநெறி | பூர்த்திசெய்யப்படவேண்டிய பட்டம் |
|---|---|---|
| 1. | மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்ப வியலாளர் | விஞ்ஞானமாணி மருத்துவ இரசாயனவியலாளர் (BSc.MLT) |
| 2. | மருந்தாளர் | மருந்தாளர் (B Pham) மருந்தாளர் (விசேடம்) (BSc. (Pharmacy) Special) |
| 3. | உடற்கூறு சிகிச்சை | உடற்கூறு சிகிச்சையாளர் (BSc. Physiotherapy) |
| 4. | கதிரியக்கவியல் | கதிரியக்கவியலாளர் (BSc. Radiotherapy) விஞ்ஞானமாணி கதிரியக்கவியலாளர் (BSc. Radiograpy) |

3. **வேறு பொதுத் தகைமைகள்**.- (அ) 2013.07.26 இல் 18 வயதுக்கும் 30 வயதுக்கும் உட்பட்டவ ராயிருத்தல்.

(ஆ) பட்டம் பயனுறும் திகதி விண்ணப்பத்தில் முடிவுத் திகதிக்கு முன்னதாக இருத்தல் வேண்டும்.

(இ) உடல் உள திடகாத்திரமுடையவராக இருத்தல்.

(ஈ) விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன் 3 வருடங்கள் வதிவிடத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

4. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) இத்தோடு இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்துக்கமைவாக ஏ4 அளவு கொண்ட தாளில் 1-10 வரை முதல் பக்கத்திலும் 11-13 வரையான விபரங்களை இரண்டாம் பக்கத்திலும் உள்ளடக்குவதற்கு ஏற்ற முறையில் விண்ணப்பங்களைத் தயாரிக்கவும்.

(ஆ) ஒவ்வொரு விண்ணப்பத்திலும் ரூபா 300 பெறுமதி கொண்ட முத்திரையை கழற்ற முடியாத வகையில் ஒட்டி அதன் மேல் கையொப்பமிட்டு முத்திரையை இரத்துச்செய்தல் வேண்டும்.

(இ) இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்/கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்/அரச கணக்காளர்/அரச பாடசாலை அதிபர்/சமாதான நீதவான்/சட்டத்தரணி அல்லது வருடாந்த சம்பளமாக 2,40,360 ரூபாவுக்கு குறையாமல் சம்பளம் பெறுகின்ற நிரந்தர ஓய்வூதிய சம்பளத்திற்குரிய பதவியைக் கொண்ட அரச உத்தியோகத்தரால் இவ்விண்ணப்பம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(ஈ) சரியான முறையில் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் தபால் உறையில் இட்டு தபால் உறையில் இடதுபக்க மேல் மூலையில் "நிறைவுகாண் சேவைக்கு முன் ஆரம்ப பயிற்சிப் பாடத்திற்காக சமனான சுகாதாரப் பட்டதாரிகளை இணைத்துக்கொள்ளல் - 2013" குறிப்பிட்ட கல்வியாண்டையும் பட்டத்தையும் குறிப்பிட்டு, "பணிப்பாளர், நிருவாகம் - 2, சுகாதார அமைச்சு, 'சுவசிரிபாய', இல. 385, வணக்கத்துக்குரிய பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு 10" எனும் முகவரிக்கு 26.07.2013 ஆந் திகதியன்று அதற்கு முன்னர் பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

(உ) இதுவரையில் தற்காலிக அடிப்படையில் சுகாதார அமைச்சின் நிர்வாகத்திற்குட்பட்ட நிறுவனங்களில் சேவை புரியும் பட்டதாரிகளும் நிரந்தர நியமனத்தைப் பெற எதிர்பார்ப்பவர்களும் இவ்வர்த்தமானி அறிவித்தலில் சொல்லப்பட்ட நிபந்தனைகளுக்கமைய விண்ணப்பிக்க வேண்டும்.

5. அரச அல்லது பாதீட்டு (துணை) அரச நிறுவனங்களின் கடமையாற்றுபவர்கள் அவர்களது திணைக்களத் தலைவர்கள் மூலமாக விண்ணப்பிக்க வேண்டும். அதேபோன்று இது வெளிவாரியான ஆட்சேர்ப்பு, குறித்த பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்திசெய்தோ அல்லது செய்யாதவிடத்தோ தற்போது வகிக்கும் பதவிக்கு மீண்டும் அமர்த்தப்பட மாட்டாது என்பதை கவனத்தில் கொள்ளவும்.

6. விண்ணப்பம் கிடைக்கப்பெற்றமை தொடர்பாக அறிவிக்கப்பட மாட்டாது.

7. உரிய தினத்திற்கு பின்பு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

8. இவ்வறிவித்தலுக்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

9. மேற்குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் பட்டம் பயனுறுகும் திகதியின் அடிப்படையில் தயாரிக்கப்படும் முன்னுரிமை பட்டியல் முறையின் செயற்பாட்டைக் கொண்டு தெரிவுசெய்யப்படுபவர்கள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு இணைத்துக்கொள்ளப்படுவர். பட்டம் பெற்ற திகதியின் அடிப்படையில் தெரிவுசெய்வது சிக்கல் நிலவும் வேளையில் சிறப்பு பொது மதிப்பீடு (GPA) அடிப்படையில் தெரிவுசெய்தல் நடைபெறும். விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சையின்போது பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதி சமர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) பட்டச் சான்றிதழ் உண்மைப் பிரதி (இவ்விண்ணப்பத்துடன் பட்டச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியை இணைக்கவும்.) ;
(இ) க. பொ. த. (சா. த.) க. பொ. த. (உ. த.) பரீட்சை பெறுபேறுகளின் உண்மைப் பிரதி ;
(ஈ) அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு அல்லது சாரதி அனுமதிப்பத்திரம் ;
(உ) மேலே 3(ஈ) இல் குறிப்பிடப்பட்டபடி உறுதிப்படுத்துவதற்காக பிரதேச செயலாளரின் ஒப்பத்துடன் கிராம சேவையாளரின் சான்றிதழ்.

10. **பயிற்சியளிக்கும் முறை** :-

| குறியீட்டு இல. | பயிற்சித் திட்டத்தின் பெயர் | பயிற்சிக் காலம் | பயிற்சிக்காக இணைத்துக் கொள்ளும் மொழி |
|---|---|---|---|
| 01 | மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் | 6 மாதம் | ஆங்கிலம் |
| 02 | மருந்தாளர் | 6 மாதம் | ஆங்கிலம் |
| 03 | உடற்கூற்று சிகிச்சையாளர் | 6 மாதம் | ஆங்கிலம் |
| 04 | கதிரியக்கவியலாளர் | 6 மாதம் | ஆங்கிலம் |

(i) நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றி தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் அவ்வப்பாடநெறிகளுக்காக உரிய பயிற்சி பாடசாலைகளில் இணைத்துக்கொள்ளப்படுவர். பாடநெறி ஆங்கிலத்தில் நடாத்தப்படும்.

(ii) பயிலுனர்கள் பயிற்சிப் பாடசாலைகளின் சட்டதிட்டங்களுக்கும் சுகாதார அமைச்சின் கட்டளைகளுக்கும் கட்டுப்படல் வேண்டும்.

(iii) பயிற்சிக்கால முடிவில் சித்தியடையாதவர்களும் நடத்தையில் திருப்தியற்றவர்களினதும் பயிற்சிப் பாடசாலையின் நிபந்தனைகளை ஏற்க மறுக்கின்றவர்களினதும் பயிற்சி எந்நேரத்திலும் எவ்வித நட்டஈடுமின்றி முடிவுக்கு கொண்டுவரப்படும்.

(iv) பயிற்சியாளர்கள் பயிற்சிக்காலத்தில் 12,360 ரூபா மாதாந்த கொடுப்பனவாக வழங்கப்படும்.

(v) பயிற்சிக்காக இணைந்த பின்பு பயிற்சிநெறியை இடைநடுவில் கைவிடாமலும் பயிற்சி முடிவில் உரிய பதவிக்கு நியமனம் வழங்கப்பட்டால் 10 வருட காலத்திற்கு உரிய மாகாண சபை, மத்திய அரசின் கீழுள்ள வைத்தியசாலைகளில் அல்லது சுகாதார திணைக்களத்தில் சேவையாற்றுவதுடன் சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்தின் ஒப்பந்தத்திற்கும் பிணைக்கும் உடன்படுவதுடன் பயிற்சிக்காலத்தில் பயிற்சியிலிருந்து நீங்கிக்கொண்டாலோ பயிற்சியைக் கைவிட்டாலோ மேலே III இன்படி பயிற்சியை இடையில் முடித்துக்கொண்டாலோ அல்லது குறித்த 10 வருட காலப்பகுதியில் சுகாதார திணைக்களத்தின் உரிய பதவியில் சேவையாற்ற மறுத்தாலோ பயிற்சிக் காலத்தில் அவருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவும் அரசினால் செய்யப்பட்ட செலவும் பிணைக்குரிய முதலும் அவர்களால் சுகாதார சேவை திணைக்களத்திற்கு செலுத்த வேண்டும். இல்லாவிடின் இச்செலவை தாங்கள் ஒப்பந்தத்தின்படி சட்ட நடவடிக்கை மூலம் அறவீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

11. **சேவையில் இணைத்துக்கொள்வதற்கான நியமங்கள்.**- பயிற்சி முடிவில் பதவியில் நிரந்தர நியமனம் செய்தல்/செய்யாமல் விடும் தீர்மானம் அச்சந்தர்ப்பத்தில் உள்ள பதவி வெற்றிட அளவினை பொறுத்ததாகும். அதன்படி பதவியில் நிரந்தர நியமனம் செய்வதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்தால் விண்ணப்பதாரி பயிற்சி பெற்ற பாடநெறிக்கு குறித்த பயிற்சி நெறியின் நிபந்தனை மற்றும் வெற்றிடங்களின் அடிப்படையில் குறித்த பதவியில் III ஆம் தரத்திற்கு நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

12. விண்ணப்பத்தை நிரப்பும்போது கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் மற்றும் விவரங்களை மிகவும் கவனமாகவும் பிழையின்றியும் உள்ளடக்கவும் பயிற்சிக்காக இணைத்துக்கொள்ளும்போதும் நியமனம் பெற்ற பின்பும் மோசடியாகத் தயாரிக்கப்பட்ட சான்றிதழ்கள் என நிரூபனமாகும்போதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்வதுடன் இவ்விடயத்தை சட்ட நடவடிக்கைக்காக குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதுடன் அந்நியமனம் இரத்துச்செய்யப்பட்டு பயிற்சியும் பதவியும் நீக்கப்படுவதோடு அது தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதுடன் மீண்டும் அரச சேவையில் இணைய முடியாதவாறு கறுப்புப் பட்டியலில் (Black List) அவருடைய பெயர் சேர்க்கப்படுவதுடன், பயிற்சிக் காலத்தில் இவருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவு அரசினால் வழங்கப்பட்ட பணம், பிணைக்காலத்திற்குரிய பணம் என்பன அறவிடப்படும்.

13. தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் உரிய பாடநெறியில் பயிற்சி பெறுவதோடு நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்கு உடல் உள தகுதியைக் கொண்டதோடு பயிற்சியின் முதலாவது மாதத்தின் வைத்திய பரிசோதனையில் உடற்தகுதியற்றவராக காணப்படுவாராயின் பயிற்சி அமர்வுக்கு பொருத்தமற்றவராக தீர்மானிக்கப்படும்.

14. மேற்படி இணைத்துக்கொள்ளப்பட்ட சகலரும் அரச சேவைக்குரிய சகல சட்டதிட்டங்களுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிர்வாக சுற்றறிக்கை பிரமாணங்களுக்கும், சுகாதார சேவைத் திணைக்களத்திற்குரிய கொள்கைகளுக்கும், நிதி சட்ட பிரமாணங்களுக்கும் வேறு சட்டங்களுக்கும் அரசினால் காலத்திற்கு காலம் நடைமுறைப்படுத்தப்படும் சட்டங்களுக்கும் கட்டளைகளுக்கும் கட்டுப்படுதல்.

15. பயிற்சிக்கு இணைத்துக்கொள்வது தொடர்பில் இவ்வர்த்தமானி அறிவித்தலின் மூலம் தெளிவான மற்றும் தெளிவற்ற விடயங்கள் தொடர்பாக உருவாகும் பிரச்சினைகளுக்கு உடன்பாடு தொடர்பாக சுகாதார அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும்.

16. பயிற்சிக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு பயிற்சிக் கல்லூரிகளில் தங்குமிட வசதிகள் வழங்குவதற்கு இந்த அமைச்சு கட்டுப்படவில்லை. அவ்வாறு வழங்குமானால் அது தொடர்பாக மதிப்பீட்டு வீட்டுக்கூலி, நீர் மற்றும் மின்சாரம் போன்றவற்றிற்கு கட்டணம் அறவிடப்படும்.

வைத்தியர் வை. டீ. நிஹால் ஜயதிலக,
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

சுகாதார அமைச்சு,
"சுவசிரிபாய",
இல. 385, வணக்கத்துக்குரிய பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10,
2013, யூன் 24.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மருத்துவ தேவைக்காக நிறைவுகாண் சேவைக்கு முன் ஆரம்ப பயிற்சி பாடத்திற்காக சமனான சுகாதாரப் பட்டதாரிகளை இணைத்துக்கொள்ளல் - 2013**

| பாடநெறி குறியீட்டு எண் வர்த்தமானி அறிவித்தலுக்கமைய |
|---|
| |

விண்ணப்பப்படிவத்தை பூர்த்திசெய்யும் முன் வர்த்தமானி அறிவித்தலை நன்கு வாசிக்கவும்.

* விண்ணப்பிக்கும் பாடநெறி (சிங்களத்தில்/தமிழில்) :----.
* விண்ணப்பிக்கும் பாடநெறி (ஆங்கிலத்தில்) :----.

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)
(உதாரணம் - A. B. C. Silva)
(ஆ) முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
(இ) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3. தபால் முகவரி :

| சிங்களத்தில்/தமிழில் | ஆங்கிலத்தில் |
|---|---|
| ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ |

4. (அ) நிரந்தர முகவரி :-

சிங்களத்தில்/தமிழில் ஆங்கிலத்தில்

............................................ ............................................
............................................ ............................................
............................................ ............................................

(ஆ) தொலைபேசி இலக்கம் :

தற்காலிக | | | | | | | | | | |

நிரந்தர | | | | | | | | | | |

(இ) பதிவு மாவட்டம் :-
சிங்களத்தில்/தமிழில் :................................................
ஆங்கிலத்தில் :................................................

(ஈ) நீங்கள் இந்த மாவட்டத்தில் பதிவுசெய்தவரா ? ஆம்/இல்லை :................................................

(உ) ஆம் எனின், எவ்வளவு காலம் ? :.......................................

5. பிறந்த திகதி :

ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.

2013.07. 26 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

6. (பெண்/ஆண்) பால் :

பெண் ☐ ஆண் ☐

(குறித்த கட்டத்தினுள் ✓ அடையாளமிடுக.)

7. நீங்கள் இலங்கைப் பிரசையா ?

ஆம் ☐ இல்லை ☐

(குறித்த கட்டத்தினுள் ✓ அடையாளமிடுக.)

8. விவாகமானவர்/விவாகமாகாதவர் :

விவாகமானவர் ☐ விவாகமாகாதவர் ☐

(குறித்த கட்டத்தினுள் ✓ அடையாளமிடுக.)

9. **கல்வித் தகைமை :-**

| | பெற்ற பட்டம் | தரம் | சிறப்பு பொது மதிப்பீடு | பல்கலைக் கழகம் | கல்வி ஆண்டு |
|---|---|---|---|---|---|
| 1. | | | | | |

10. நீங்கள் ஏதேனும் குற்றத்தின் பேரில் நீதிமன்றில் குற்றவாளியாக் கப்பட்டுள்ளீர்களா ?

ஆம் ☐ இல்லை ☐

(குறித்த கட்டத்தினுள் ✓ அடையாளமிடுக.)

ஆம் எனின், விளக்குக :..........................................................

11. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

(அ) வர்த்தமானி அறிவித்தலை பூரணமாக வாசித்து விளங்கிக் கொண்டதன் பின்னர் அதன் அனைத்து நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டு விண்ணப்பப்படிவம் பூர்த்திசெய்யப்பட்டதுடன், நான் வேறேதும் முழு நேர பாடநெறியையும் தொடரவில்லை எனவும் இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் அனைத்தும் நான் அறிந்தவரையில் உண்மையானது, சரியானது எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) என்னால் வழங்கப்பட்ட இந்த பிரகடனம் மற்றும் விண்ணப்பப் படிவத்தில் அடங்கியுள்ள ஏதேனும் தகவல்கள் பிழையானது என தெரியவருமிடத்து பயிற்சிக்கு நான் தகுதியற்றவராவதுடன் நியமனம் வழங்கப்படின் அதன் பின்னர் அது நிரூபிக்கப்படுமிடத்து சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நன்கறிவேன்.

(இ) அதேபோன்று இது வெளிவாரியான ஆட்சேர்ப்பாவதுடன் எனக்கு குறித்த பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்திசெய்ய முடியும் அல்லது முடியாதவிடத்து தற்போது வகிக்கும் பதவிக்கு மீண்டும் இணைய முடியாதென்பதை நன்கு அறிவேன்.

முத்திரை
ரூபா 300

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

12. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிசெய்தல் :**

இவ்விண்ணப்பத்தை முன்வைக்கும் திரு./ திருமதி/ செல்வி ............................................ ஐ நான் தனிப்பட்ட முறையின் அறிவேன் எனவும் என் முன்னிலையில் அவரது கையொப் பத்தை ........................................ ஆந் திகதி வைத்தார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
உறுதிப்படுத்தும் அதிகாரியின் பதவி முத்திரை :
பதவி :----.
விலாசம் :----.
திகதி :----.

*13.* ***விண்ணப்பதாரி அரச ஊழியராயின் திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :***

(i) மேற்குறித்த விண்ணப்பதாரியாகிய திரு./ திருமதி/ செல்வி ............................................ இத்திணைக்களத்தில் ........................................................ பதவியில் பதவி வகிக்கிறார் என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

(ii) விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என்பதை உறுதிப்படுத்துவதுடன் இப்பதவி தொடர்பாக தெரிவுசெய்யப்படின் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்பதையும் தெரிவிக்கிறேன்.

(iii) அத்துடன் இது வெளிவாரியான ஆட்சேர்ப்பாவதுடன் அவர் குறித்த பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்ய முடியும் அல்லது முடியாதவிடத்து தற்போது வகிக்கும் பதவிக்கு மீண்டும் இணைய முடியாதென்பதை அவர் நன்கு அறிவார்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திணைக்களத் தலைவரின் முழுப்பெயர் :----.
திணைக்களத் தலைவரின் பதவி முத்திரை :----.
பதவி :----.
விலாசம் :----.
திகதி :----.

*7-353*

திருத்தம்

## அரச மொழிபெயர்ப்பாளர் சேவையின் வகுப்பு I இலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடைப் பரீட்சை - 2012 (2013)

*2013, யூன் மாதம் 28 ஆந் திகதிய, 1817 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட "அரச மொழிபெயர்ப்பாளர் சேவையின் வகுப்பு I இலுள்ள அலுவலர் களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 2012 (2013)" தமிழ்மொழி மூல அறிவித்தலில் முதலாம் பந்தி பின்வருமாறு திருத்தப் படுகின்றது :-*

*"1994.07.26 ஆந் திகதிய 829/7 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள மொழிபெயர்ப்பாளர் சேவை தொடர்பான பிரமாணக் குறிப்பின் பந்தி 08 இன்கீழ் மேற்கொண்டுள்ள ஏற்பாடுகளின்படி மொழிபெயர்ப்பாளர் சேவை வகுப்பு I இன் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2013, ஒற்றோபர் மாதம் கொழும்பில் நடாத்தப்படும். இப்பரீட்சைக்கு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தோற்றலாம். பரீட்சைக்கு விண்ணப்பித்த மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது."*

*2. இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய ஏற்பாடுகள் அவ்வாறே அமுலிலிருக்கும்.*

கே. வீ. பி. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு7.
2013, யூன் 28.

*7-394*